**ஒதுக்கீட்டுத் தலைப்பு 319 - சப்ரகமுவ மாகாண சபை**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

**1. செயற்பணியும் பிரதான பணிகளும்**

**(அ) செயற்பணி**

சப்ரகமுவ மக்களின் முன்னேற்றத்திற்காக சகல வளங்களையும் வினைத்திறனாகவும் பயனுள்ளவாறும் முகாமைப்படுத்துவதின் மூலமும் சப்ரகமுவை அபிமானமானத்துடன் முன்னோக்கிய பயணமொன்றை நோக்கி இட்டுச்செல்லல்

**(ஆ) பிரதான பணிகள்**

(i) 1987 இன் 42 ஆம் ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் கீழ் கௌரவ ஆளுனருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாட்டு முறைமைகளை அமுல்ப்படுத்தல்.

(ii). 13 ஆவது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வருமானம் தொடர்பாக மதிப்பீடுகளை மேற்கொள்ளல், சேகரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்

(iii). மாகாணத்தினுள் வீதிகளைப் புனரமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தலும் புதிய வீதிகள் மற்றும் மாற்று வீதிகளை நிர்மாணித்தலும்

(iv). மாகாணத்தினுள் சுற்றுலாத் தளங்களை மேம்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்

(v). தேசிய கல்விக் கொள்கைக்கு இணங்கும் வகையில் கல்வித் திட்டங்களைத் தயாரித்து அமுல்ப்படுத்துதல்.

(vi). வீடுகள், பயணிகள் போக்குவரத்து மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

(vii). மின்சார வசதிகள் இல்லாத கிராமிய மக்களுக்கு மின்சாரத்தைப் வழங்குதல் மற்றும் மாற்று வழி மின்சக்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்.

(viii). விசேட தேவையுள்ள ஆட்களுக்காக வசதிகளையும் அநாதைகள், ஆதரவற்றோர் மற்றும் தவறான வழியில் சென்ற சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தலும் அவர்களுக்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(ix). மாகாணத்தினுள் மேற்கத்திய மற்றும் உள்நாட்டு மருத்துவ நடவடிக்கைகளை கூட்டிணைத்தல், அரசின் சுகாதாரக் கொள்கையை மாகாண மட்டத்தில் அமுல்ப்படுத்துவதற்கு உதவி புரிதலும் மகளிர் விவகார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தலும்.

(x). காணி, மாகாண நீர்ப்பாசன அபிவிருத்தி, விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்துதலும் சுற்றாடலைப் பாதுகாத்தலும் அபிவிருத்தி செய்தலும்

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

சப்ரகமுவ மாகாண சபைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 14,360,324,000 தொகையாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 12,585,096,378 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சேமிப்புக்கள் ரூபா 1,775,227,622 ஆக இருந்ததுடன், அது மொத்த தேறிய ஏற்பாட்டின் 12.36 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின் தன்மை | மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு | தேறிய நிதியேற்பாடு | உள்ளவாறான செலவினம் | சேமிப்புக்கள் | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 11,243,324,000 | 11,347,324,000 | 10,736,939,000 | 610,385,000 | 5.38 |
| மூலதனம் | 3,005,000,000 | 3,013,000,000 | 1,848,157,378 | 1,164,842,622 | 38.66 |
| மொத்தம் | 14,248,324,000 | 14,360,324,000 | 12,585,096,378 | 1,775,227,622 | 12.36 |